# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (உ) - 2020

### தரம் - 12 (2021) | உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் -2

பெயர் / சுட்டெண் : .....................

திரு.ர.யாழினி B.Sc (Hons), PGDE

**அறிவுறுத்தல்கள் :**

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

*01.* ஒரு ஹெக்ரயர் காணியிலான மழைவீழ்ச்சி 5 மில்லிமீற்றர் எனின் அக்காணி பெறும் நீரின் மொத்த அளவு
1. 0.50 கனமீற்றர் 2. 5.0 கனமீற்றர் 3. 10.0 கனமீற்றர் 4. 50.0 கனமீற்றர் 5. 100.00 கனமீற்றர்

02. 12 சென்றிமீற்றர் விட்டத்தைக் கொண்ட ஒரு மழைக் கணிச்சியில் சேகரிக்கப்பட்ட நீரின் மொத்தக் கனவளவு 792 கனசென்றிமீற்றர் எனின் மழைவீழ்ச்சி எதற்குச் சமனாகும்.
1. 1.75 சென்றிமீற்றர் 2. 2.0 சென்றிமீற்றர் 3. 7 சென்றிமீற்றர்
4. 12.0 சென்றிமீற்றர் 5. 666.0 சென்றிமீற்றர்

03. இலங்கையின் ஈரவலயம் சிறுபோக (யால) மழையைப் பெறுவது,
1. வடகிழக்குப் பருவக் காற்றின் மூலம்
2. தென்மேற்குப் பருவக் காற்றின் மூலம்
3. பருவவிடைக்காற்று, தென்மேற்குப் பருவக்காற்று என்பவற்றின் மூலம்
4. பருவவிடைக்காற்று, வடகீழக்குப் பருவக்காற்று என்பவற்றின் மூலம்
5. பருவவிடைக்காற்றின் மூலம் மட்டும்

04. பெரும்போகம் (Maha season) பொதுவாக நீடித்திருப்பது,
1. செப்ரம்பர் ஆரம்ப காலம் தொடக்கம் மார்ச் இறுதிவரை
2. ஒக்ரோபர் ஆரம்ப காலம் தொடக்கம் மார்ச் இறுதிவரை
3. மார்ச் ஆரம்ப காலம் தொடக்கம் ஒகஸ்ட் இறுதிவரை
4. மே நடுப்பகுதி தொடக்கம் செப்ரம்பர் ஆரம்ப காலம் வரை
5. ஏப்றில் ஆரம்ப காலம் தொடக்கம் ஒக்ரோபர் ஆரம்ப காலம் வரை

06. 1 ஹெக்ரெயர் நிலம் ஒன்றிலே 1 மணித்தியாலத்தில் பெய்த மழைவீழ்ச்சியின் மூலம் கிடைத்த நீரின் கனவளவு 85கன மீற்றர் ஆகும். அப்பிரதேசத்தில் மழைவீழ்ச்சியின் செறிவு
1. மணித்தியாலத்திறகு் 0.85 மில்லிமீற்றர் 2. மணித்தியாலத்திற்கு 8.5 மில்லிமீற்றர்
3. மணித்தியாலத்திறகு் 42.5 மில்லிமீற்றர் 4. மணித்தியாலத்திறகு் 85.0 மில்லிமீற்றர்
5. மணித்தியாலத்திற்கு 850.0 மில்லிமீற்றர்

07. விவசாய நிலம் ஒன்றிலே ஒளிச்செறிவை அளவிடப் பயன்படுத்தக்க உபகரணம்
1. சூரியக் கதிர்ப்பைப் பதிவுசெய்யும் உபகரணம் 2. வோற்றாமானி
3. படிகுறை நிலைமாற்றி 4. சூரிய ஒளிமானி 5. அனிலமானி

08. சாரீரப்பதனை அளவிட உதவும் உபகரணமானது
1. ஆவியாதல் தட்டு 2. ஈர உலர் குமிழ் வெப்பமானி 3. இழுவிசைமானி
4. pH மானி 5. பாரமானி

09. மழை நாளொன்றிலே, 10 cm விட்டமுள்ள மழைமானியொன்றுள் சேகரிக்கப்பட்ட நீரின் கன அளவு 550 $cm^3$ ஆகும். இம் மழைவீழ்ச்சியின் அளவு பின்வரும் எப்பெறுமானத்துக்குச் சமமானது

1. 7.0 cm 2. 5.0 cm 3. 25.0 cm 4. 22.0 cm 5. 10.0 cm

* உலர் - ஈர குமிழ் வெப்பநிலை வித்தியாசத்துடன் உள்ள சாரீரப்பதனை பின்வரும் அட்டவணை காட்டுகிறது. அட்டவணையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| வெப்பநிலை | உலர் ஈர குமிழ் வித்தியாசம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| $^{O}C$ | 0.5 | 1.0 | 1.5 | 2.0 | 2.5 | 3.0 |
| 28 | 96 | 93 | 89 | 85 | 82 | 78 |
| 30 | 96 | 93 | 89 | 86 | 83 | 79 |
| 32 | 96 | 93 | 90 | 86 | 83 | 80 |

10. குறிப்பிட்ட ஓர் இடத்தில் உலர், ஈர குமிழ்களின் வாசிப்புகள் முறையே $30^0C$, $28^0C$ ஆக இருந்தன. அவ்விடத்தில் உள்ள சாரீரப்பதன்

1. 85 % 2. 86 % 3. 93 % 4. 83 % 5. 78 %

11. வளியில் அதிகுறைந்த ஈரலிப்பு காணப்பட்டபோது உலர், ஈர குமிழ்களின் வாசிப்புகள் முறையே

1. $28^0$ C, $31^0$ C 2. $31^0$ C, $28^0$ C 3. $25^0$ C, $28^0$ C
4. $28^0$ C, $25^0$ C 5. $28.5^0$ C, $28^0$ C

12. ஒவ்வொரு நாளும் ஒரு வானிலை அவதான நிலையத்தில் தரவுகள் பதியப்படுவது,
1. மு.ப 8.30 மணிக்கும் பி.ப 3.30 மணிக்கும்
2. மு.ப 9.00 மணிக்கும் பி.ப 4.00 மணிக்கும்
3. மு.ப 8.00 மணிக்கு மட்டும்
4. மு.ப 9.00 மணிக்கு மட்டும்
5. நண்பகல் 12.00 மணிக்கு மட்டும்

13. குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றில் குறிப்பிட்ட நாளில் பெய்த மழை வீழ்ச்சியின் அளவு 7.0 cm. இந்நாளில் 10 cm விட்டமுள்ள ஒரு மழைமானி ஒன்றில் சேகரிக்கப்பட்ட நீரின் கனவளவு,

1. 55.68 $cm^3$ 2. 220 $cm^3$ 3. 440 $cm^3$ 4. 550 $cm^3$ 5. 2200 $cm^3$

14. வெப்பநிலை குறைவடைவதால் உயிர்முறைமைகளில் ஏற்படும் தாக்கம்
1. முட்டை உற்பத்தி அதிகரிக்கும் 2. மகரந்தமணி உலர்வடையும்
3. பண்ணை விலங்குகளில் இனப்பெருக்க வளம் அதிகரிக்கும்
4. நன்னீர் மீன்களின் குடித்தொகை குறைவடைதல் 5. நோய்த்தாக்கம் அதிகரித்தல்

15. வளிமண்டல அவதான நிலையத்தில் தினமும் இரண்டு தடவைகள் தரவு பெறும் சாராமாறி எது?
1. உயர்வு வெப்பநிலை 2. ஈரப்பதன் 3. காற்றின் வேகம்
4. சூரிய பிரகாச மணித்தியாலங்கள் 5. மழைவீழ்ச்சி

16. பாசனநீரைப் பயன்படுத்தி இலங்கையின் வரண்ட வலயப் பிரதேசங்களிலே பயிரிடும்போது பெரும்போகத்தைக் காட்டிலும் சிறுபோகத்தில் விளைச்சல் அதிகமாக இருப்பதற்கு மிகக் கிட்டிய காரணம்,
1. நீர்ப் பற்றாக்குறை ஏற்படாமை.
2. சிறுபோகத்தின்போது நோய்களும் பீடைகளும் குறைவாக இருக்கின்றமை.
3. சிறுபோகத்தின்போது சூரிய ஒளியின் செறிவு கூடுதலாக இருக்கின்றமை.
4. பாசன நீரின் கீழ் இடர்ப்பாடின்றி வளமாக்கியைப் பிரயோகிக்கத்தக்கதாகவும் மற்றைய வளர்ப்புப் பணிகளைச் செய்யத்தக்கதாகவும் இருக்கின்றமை.
5. வரண்ட நிலைமைகளில் சிறுபோகத்தின்போது மிகச் சிறந்த வித்துகளைப் பயன்படுத்தத்தக்கதாக இருக்கின்றமை.